
www.padippakam.com

# தமிழ்க்கலை - தொழில்நுட்பக் கல்லூரி
# Academy of Tamil Arts & Technology



## ஆண்டு மலர் 1999

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்க்கலைத் தொழில் நுட்பக் கல்லூரி

## கல்லூரிக் கீதம்

வாழிய உலகத் தமிழர் கல்லூரி
வாழிய வாழிய வாழியவே
வளமார் தமிழும் கவின்கலை தொழில்நுட்பம்
தமிழினம் பெறவே வாழியவே

உலகத் தமிழினம் ஒன்றுபடவும்
ஒற்றுமை பெறவும் வாழியவே
நலமாய் நம்மினம் தமிழீழம் நயந்தே
சுதந்திர வாழ்வில் வாழியவே

கனடாத் தமிழர் பல்கலை பெற்றே
ஒன்றாய் வளர்வோம் வாழியவே
இனமாய் அன்னை மொழியில் வளர்வோம்
நன்றாய் உலகில் வாழியவே

யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்பதெம் இலக்கு வாழியவே
ஓதும் கலைகளில் உயர்ந்தே ஓங்கி
இன்பமாய்த் தமிழர் வாழியவே

படிப்பகம்

www.padippakam.com

# 7வது 7th ஆண்டுவிழா மலர் Anniversary Vizha Malar

யூன் 1999 June

தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரி
Academy of Tamil Arts & Technology

2163 லோறன்ஸ் அவென்யூ கிழக்கு
அறைத் தொகுதி B
ஸ்காபறோ
ஒன்ராரியோ, M1P 2P5

தொ.பே.: (416) 757-9601
தொ.ந.: (416) 757-2006

2163 Lawrence Avenue East
Suite B
Scarborough
Ontario, M1P 2P5

Tel: (416) 757-9601
Fax: (416) 757-2006

E-Mail: academy@atat.org
Website: www.atat.org

படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரியின் நோக்கங்கள்

- தமிழர்தம் மொழி, கலை, பண்பாடு கனடாவில் வளர்ச்சி அடைவதற்குரிய ஆக்கபூர்வமான வழிவகைகளை வகுத்துச் செயற்படல்.
- எமது மொழி, கலை, பண்பாடு மற்றும் பாரம்பரிய விழுமியங்களை இளஞ்சந்ததியினர் நன்குணர்ந்து அவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு அறிவூட்டுதல்
- சமூக கலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்து, எமது கலை பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணும் அதேவேளையில் கனேடிய பல்லின மக்களோடு இணைந்து வாழக்கூடிய பண்பினை மேம்படுத்தல்.
- கனடாவின் தொழிற்றுறை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொழிற்றிறன் பயிற்சி வகுப்புகளை நடத்தி கனேடிய பொருளாதார மேம்பாட்டுக்கு ஏற்ப மக்களின் தொழில் வளத்தினை ஊக்குவித்தல்.
- மாணவர்களின் எதிர்காலம் வளம்மிக்கதாக அமைய, அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற வழிவகைகளை வகுத்து நடைமுறைப் படுத்தல்.
- தமிழர்தம் வரலாறு, மொழி, கலை, பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும் மக்கள் இவற்றை அறிந்து கொள்ளவும் வழிவகுக்கும் முறையில் ஆவணங்களைக் கொண்ட ஒரு வரலாற்று நிலையத்தை அமைத்தல்.
- கனடாவாழ் தமிழர்கள் தமது தாயகத்துடனும், உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுடனும் தமது மொழி, கலை, பண்பாடு தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஓர் அமைப்பாகச் செயற்படல்.



படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரியின் வரலாறு

- எமது கல்லூரி உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விச் சேவைக்கான ஓர் உப அமைப்பாகும்.

- எமது கல்லூரி இலாப நோக்கற்ற கல்விச்சேவை அமைப்பாக 1993 ஆடி 18ம் திகதி பதிவுசெய்யப்பட்டது.

- ரொறன்ரோ, ஸ்காபுரோ, மிசிசாக்கா ஆகிய இடங்களில் 1990-1993 வரை கணினி வகுப்புகளை நடத்தி வந்த எமது கல்லூரி, 93 ஆடி முதல் தமிழ்மொழி, நுண்கலை, கல்விமேம்பாடு, தொழில் திறன் பயிற்சி போன்ற துறைகளை ஆரம்பித்தது.

- கல்லூரி தற்போதைய தலைமைப் பணிமனையை 16 புரட்டாதி 96ல் ஆரம்பித்தது. இப்பணிமனை 14 ஐப்பசி 1996ல் திரு. பழநெடுமாறன் அவர்களால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

- கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தற்போது 105 சுயவிருப்புப் பணியாளர்கள் பணியாற்றிவருகின்றனர்.

- கல்லூரியின் இரண்டாவது பணிமனை ஆவணி 98ல் வடயோர்க்கில் திறக்கப்பட்டது.

- இங்கு கல்விகற்கும் மாணவர்களைக் கொண்ட "சாரணர் இயக்கம்" அமைக்கப்பட்டு சேவை செய்து வருகிறது.

- கல்லூரியில் கல்விகற்ற மாணவர்களின் 'பழைய மாணவர்கள் சங்கம்' ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

**தற்போது எமது கல்லூரியின் பணிகள் பின்வரும் இடங்களில் நடைபெறுகின்றன.**

தலைமை அலுவலகம்:
**2163 Lawrence Avenue East,**
**Suite "B"**
**Scarborough, Ontario**
**M1P 2P5**
**Tel: (416) 757-9601**
Fax: (416) 757-2006

**Scarborough**
2130 Lawrence Avenue East
**Suite 204**
**Scarborough, Ontario**
M1R 3A9
Tel: (416) 757-6043

**Wellesley/Parliament**
James Town
**Tel: (416) 757-9601**

**Lansdowne**
**1212 Bloor Street West.**
**Toronto, Ontario**
**M6H 3H3**
**Tel: (416) 536-5678**

**Jane/Finch**
**1977 Finch Ave. West**
Suite 204
**North York, Ontario**
**Tel: (416 ) 749-7511**

E-Mail atat@atat.org Website: http://www.atat.org



படிப்பகம்

www.padippakam.com





# கல்லூரியின் சுயவிருப்புப் பணியாளர்கள் 98-99



படிப்பகம்

## இடமிருந்து வலமாக:-

## இருப்பவர்கள்:-

திருமதி. கி. இரட்ணேஸ்வரன், திருமதி, வி, சீனிவாசகம், திரு. ச. சிற்சபைசன், திரு. சோ. ராஜ்குமார், திரு. ச. நாகேந்திரன், திரு. செ. சந்நிதிவேல், திரு. சு. இராசரத்தினம்(பொறுப்பாளர்), திரு. மா. செ. அலெக்ஸ்சாந்தர், திரு. தி. மோகேந்திரன், திரு. பே. பெனடிக்ற், திரு. வே. சுந்தரதாஸ், திருமதி. பொ. திருஞானம், திரு. சே. குயிட், திரு. தி, ராஜபாலன்.

## நிற்பவர்கள்:-

1வது வரிசை:

திருமதி. து. பாலமோகன், திருமதி. தி. மகேந்திரன், திருமதி. இ. ஜெயகாந்தன், திருமதி. இ ஸ்ரீஜெயலிங்கம், திருமதி. பி. ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி. சு. மூர்த்தி, திருமதி. கு. மாணிக்கவாசகர், திருமதி. ஜெ. சிவராம், திரு. பூ. சிவானந்தமூர்த்தி, திரு. க. திருநாவுக்கரசு, திரு. ப. அழகர்சாமி, திருமதி. ஆ. பாலசிங்கம், திருமதி. சா. ஞானரட்ணம், திருமதி. ம. கனகலிங்கம், திருமதி. அ. ஸ்ரீகாந்தன், திருமதி, பி. அன்ரன், திரு. செ. சண்முகலிங்கம், திரு வாகீசன்.

2வது வரிசை:

திருமதி. ப. இராசரத்தினம், திருமதி. த. சிவானந்தன், திருமதி. க. அலோசியஸ், திருமதி. இ. சிவலோகநாதன், திருமதி. த. யோகராசா, திருமதி. அ. சிவராஜ், திருமதி. கெ. தேன்மொழியாள், திருமதி. சு. சிவப்பரமானந்தா, திருமதி. சு. பாலஸ்கந்தா, க. அருட்சோதி, திருமதி. மே. அம்பிகைபாகன், திரு. மு. சிதம்பரஈசன், திரு. த. கனகசபை, திரு. ச. கிரிதரன், திரு. பொ. விவேகானந்தன்.


3வது வரிசை:

திரு. து. வரதராசன், திரு. ஈ. கணேசநாதன், திருமதி. ப. மதிவாசன், செல்வி. நி. நாகரட்ணம், திருமதி. சு. செல்வன், திருமதி. கு. பிரேமச்சந்திரன், திருமதி, சோ. லோறன்ஸ், திரு. க. சிவா, திரு. இ. மோகன், திரு. சண்முகநாதன், திரு. க. பராபரன், திரு. இ. பத்மநாதன், திரு. சா. ஸ்ரீதரன், திரு. ச. இருதயானந்தன், திரு. அ. முருகதாஸ்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com





## கல்லூரியின் அலுவலக சுயவிருப்புப் பணியாளர்கள்

இடமிருந்து வலமாக.

இருப்போர்:

திருமதி. தி. மகேந்திரன், திரு. ச. நாகேந்திரன், திரு. ச. சிற்சபைஈசன், திரு. சு. இராசரத்தினம், திரு. ம. செ. அலக்ஸ்சாந்தர், திரு. பொ. திருஞானம், திரு. த. கனகசபை.

நிற்போர்:

திருமதி. யோ. தவம், திரு. வாகீசன், திரு. க. திருநாவுக்கரசு, திருமதி. பா. துசியந்தி, திரு. அ. தாஸ், திரு. பூ. சிவானந்தமூர்த்தி, நா. நிரோதினி, திரு. வே. சுந்தரதாஸ்.



படிப்பகம்

www.padippakam.com



# பணிகள்

## தமிழ்மொழித் துறை

தமிழ்மொழியைப் பேசவோ, எழுதவோ முடியாதவர்கள் முதற்கொண்டு தமிழ்மொழியில் நன்கு தேர்ச்சி உள்ளவர்கள் வரை பல தரப்பட்ட வயதினருக்கும், ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகப் புகுமுகத் திறமைச் சித்தி வகுப்பு வரை நடத்தப்படுகின்றது.

தமிழ்மொழியில் சிறந்த அறிவினை மாணவர்கள் பெறும் பொருட்டு அவர்களை ஊக்கப் படுத்தவும், சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கெனத் தனிப்பட்ட தரமுடைய வகுப்புகளை நடத்தும் நோக்கோடும் தமிழ்மொழித்திறன் தேர்வினை நடத்துதல்.

தமிழ்மொழியினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் கனேடிய சூழலுக்கு ஏற்ப தமது தமிழ்மொழி கற்பிக்கும் திறனை அபிவிருத்தி செய்யக் கூடியதாக ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.

## கணினித் துறை

கணினி பற்றிய எவ்வித முன் அறிவு அற்றவர்கள் முதற் கொண்டு, கணினித் துறையில் தொழில் புரிவோர் வரை தமது கணினி பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ளக் கூடியவகையில் பல தரப்பட்ட வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

## தொழிற்திறன் மேம்பாட்டுத்துறை

தொழில்சார் திறமைகளை அபிவிருத்தி செய்யக் கூடிய பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

## மாணவர் கல்வி மேம்பாட்டுத்துறை

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தமது கல்லூரிகளில் சிறந்து விளங்கக் கூடிய வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

## நுண்கலைத் துறை

பாட்டு, வயலின் வீணை, மிருதங்கம், பரதநாட்டியம், பியானோ கீபோட் முதலான இசை நடன வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கலைத்துறையில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடவும், உரிய பாடத்திட்டங்களையே கற்பதையும் ஊக்கப்படுத்தும் நோக்கோடு எம்மால் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

## மூலவளநிலையம்

எமது இனம் பயன் அடையும் வகையில் தமிழர் வரலாறு மற்றும் அவர்கள்தம் மொழி, கலை, பண்பாடு பற்றிய தகவல்கள் அடங்கிய மூலவளநிலையம் ஒன்றினை அமைத்தல். மேலதிகத் தகவல்களை எமது Web Page http://www.atat.org மூலம் அறிந்து கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com





வெலஸ்லி/பார்லிமென்ற் வளாகத்தில் தமிழ்மொழியைக் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திருமதி. அ. ஸ்ரீகாந்தன், திருமதி. ப. மௌனகுரு.





படிப்பகம்

www.padippakam.com

*தாய் அமைப்பின்*

# வாழ்த்துச் செய்தி

கல்விச்சேவைக்கான எமது உபஅமைப்பாம் தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி, ஏழாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எமது மகிழ்ச்சியினையும், பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்நிய ஆக்கிரமிப்பாளனின் வன்செயல்களினால் தாய் மண்ணில் அல்லற்படும் எமது உடன் பிறந்தோருக்கு எம்மாலான உதவிகளைச் செய்யும் அதேவேளை புலம் பெயர்ந்து குடியேறிய இந்நாட்டிலும், எம்மக்கள் சிறப்போடு சிறந்த பிரசைகளாக வாழ எம்மாலானவற்றை செய்வதே எமது குறிக்கோளாகும்.

மேற்கூறிய அடிப்படையில் எம்மக்களின் சகல பிரிவினரின் தேவைகளையும் இயன்றவரை நிறைவேற்றும் பொருட்டு மகளிர் அமைப்பு, மாணவர் அமைப்பு, செஞ்சோலை, கலைபண்பாட்டுக் கழகம், குடிவரவு குடியமர்வுச் சேவை, மக்கள் தகவல்களை அறியும் பொருட்டு பத்திரிகை - ஒளிபரப்புச்சேவை, கல்விச்சேவை ஆகியவற்றுக்கான தனித்தனி உப அமைப்புகளை எமது இயக்கம் கொண்டுள்ளது.

எமது பிள்ளைகள் தமிழர் தம் மொழி, கலை என்பனவற்றுடன் இந்நாட்டில் தமது தொழிற்கல்வியிலும் சிறந்து விளங்கக் கூடியதாகவும் தொழிற்துறையில் அறிவும், அனுபவமும் கொண்ட எம்மவர்கள் மின்கணனி யுகத்தில் ஒன்றிணைந்து தமது அறிவைப் பயன்படுத்தக் கூடிய வகையிலும் தற்போது எமது கல்விச்சேவை அமைப்பாக தமிழ்க்கலைத் தொழில்நுட்பக் கல்லூரி செயற்பட்டு வருகின்றது.

எமது இக்கல்விச் சேவை அமைப்பில் சுயவிருப்புப் பணியாளர்களாகப் பணியாற்றும் அனைவருக்கும் உலகத்தமிழர் இயக்கம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. கல்லூரியானது மேலும் வளர்ந்து எமது இலக்கை அடைய முன்நின்று உழைக்கும் சகலருக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை கல்லூரியின் ஏழாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற எமது நல்லாசிகள்.

நன்றி! வணக்கம்!

உலகத்தமிழர் இயக்கம்.

படிப்பகம்

www.padippakam.com






கணிதம், விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர்கள்
திரு. வாகீசன், திரு. சு. நாகேந்திரா, செல்வி. நிரோதினி நாகரட்ணம்



OAC தமிழ்மொழி கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. க. குகதாசன்.



படிப்பகம்

www.padippakam.com

Minister of Health | Ministre de la Santé

Allan Rock

Ottawa, Canada K1A 0K9

JUN / JUIN - 7 1999

S. Rajaratnam
Executive Director
Academy of Tamil Arts & Technology
2163 Lawrence Avenue East, Suite B
Scarborough, Ontario
M1P 2P5

Dear Mr. Rajaratnam:

Thank you for your letter of May 18, 1999, in which you invite me to be Guest of Honour at your exhibition to be held on June 26, 1999, in Toronto, on the occasion of your Academy's 7th Annual Celebrations.

Unfortunately, due to a heavily committed schedule, I am unable to accept your kind invitation. I do nevertheless wish you every success with this undertaking to acquaint others with your language, arts, culture and heritage.

Once again, thank you for writing.

Yours very truly,

Allan Rock

Allan Rock


படிப்பகம்

www.padippakam.com





ஸ்காபுரோவில் மிருதங்கம் பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. கிரிதரன் சச்சிதானந்தன்.



திருமதி. இ. கிருபாநிதியிடம் நடனம் பயிலும் மாணவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

1834

CITY OF
TORONTO

# *Congratulations to The Academy of Tamil Arts & Technology*

*I would like to extend my congratulations to the Academy of Tamil Arts & Technology on their 7th Annual Celebrations and felicitate them for their successful efforts in divulging the Tamil Language, Culture and Heritage.*

*I was also very pleased to have been invited to take part in this Community Celebration which brings people together from various walks of life.*

*I look forward to many more celebrations, and wish everyone at the Academy of Tamil Arts & Technology many successes.*

**Presented by**

**Mario Silva**
***City Councillor***
***Trinity Niagara***

July, 1999

படிப்பகம்

www.padippakam.com





உயர்தரவகுப்பில் கணிதம் பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. யோகநாதன் பாலசிங்கம்.




ஸ்காபுரோ வளாகத்தில் தமிழ்மொழி கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. பொ. விவேகானந்தன்.



படிப்பகம்

www.padippakam.com

Toronto
Catholic
District
School Board

Thursday May 20, 1999

S. Rajaratnam (Raja)
Executive Director
Academy of Tamil Arts & Technology
2163 Lawrence Ave. E., Suite B
Scarborough, ON M1P 2P5

Dear Raja,

It has been a pleasure working with you and your staff at the Academy promoting the Tamil culture through our Saturday school languages classes. The Toronto Catholic District School Board believes strongly in working with our partners in the various cultural communities to further the educational goals of our students.

You are to be congratulated on your students' participation in our International Youth Symposium that was held on April 24th, 1999.

The display of the Tamil culture was most informative and the dance presentations gave people from other communities an opportunity to appreciate the artistic beauty of Tamil dancing.

You are a valued community leader with vision and commitment to promoting the Tamil culture. I consider it a privilege working with you and your community.

Sincerely,

AMolloy

Ashleigh Molloy
Program Coordinator
Continuing Education Department

80 Sheppard Avenue East, Toronto, Ontario M2N 6E8 Tel. (416) 222-8282

படிப்பகம்

www.padippakam.com





மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்களின் வருடாந்த ஒன்று கூடல்.



98 ஆண்டுமலர்.
மாணவமணியில் இடம் பெற்ற ஆக்கங்களைத் தந்த மாணவமணிகளும் தமிழர் சங்கங்களின் இணைப்பாளர் திரு. சாம் துரைச்சாமி, ஆசிரியர், திரு. ம. செ. அலெக்ஸ்சாந்தர்.



படிப்பகம்

www.padippakam.com



# சிலவார்த்தைகள் உங்களோடு. . .

***கல்லூரிப் பொறுப்பாளர்***

உலகத்தமிழர் இயக்கத்தின் கல்விச்சேவைக்கான அமைப்பாகிய நமது கல்லூரி ஏழாவது ஆண்டு விழாவினை நடத்தும் இவ்வேளை, கடந்த காலத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மால் இயன்ற பணிகளைச் செய்துவரும் சுயவிருப்புப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

கல்லூரியின் வளர்ச்சிக்கான மக்களின் பங்களிப்பும் ஆதரவும் வருடம் தோறும் அதிகரித்து வருவது இப்பணியில் ஈடுபட்டுள்ள சகலருக்கும் மனமகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தருகிறது.

தமிழர்தம் மொழி, கலை, பண்பாடு என்பவற்றினை வளர்த்துக் கொள்ள தமிழர்களுக்கென ஒரு கல்லூரி கனடாவில் அவசியம், என்பதனை மக்கள் எடுத்துக்காட்டி வருகின்றனர் என்பது தெளிவானது.

கனடாவாழ் தமிழ்மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் தமிழ்மொழி, கலைபண்பாட்டுத் துறைகளில் வழிகாட்டவும், இத்துறைகளில் உலகத்தமிழினத்துடன் தொடர்புகொண்ட ஓர் அமைப்பாகவும் இக்கல்லூரி செயல்பட்டு வருகிறது. அதற்கேற்றால் போல் தனது பணிகளை பரவலாக்கி வருகின்றது.

தமிழ்மொழியினையும் தமிழர்பாரம்பரியக் கலைகளையும் கற்பிக்கும் பொருட்டு, மேலும் பல நிலையங்களை உருவாக்க வேண்டிய அவசியம் நம்மத்தியில் உண்டு. இத்தேவையினை நிறைவேற்ற வழிவகுக்கக் கூடிய பெரியோர் சகலரையும் தாமாகவே முன்வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கனேடியத் தமிழருக்கென ஒரு நிரந்தரக் கட்டிடத்தில் நூல்நிலையம், தகவல் மூலவள நிலையம் என்பவற்றுடன் ஒரு முழுநேரக் கல்லூரிக்கான வசதிகளை உள்ளடக்கிய ஒரு கல்லூரி அமைய வேண்டியது அவசியம். இதற்காகச் சமூக நலனில் அக்கறை கொண்ட சகலரும் தாமாகவே முன்வந்து இணைந்து செயல்பட வேண்டும் என அழைக்கிறோம்.

இம்மலருடன் இணைந்து வெளிவரும் மாணவமணியில் ஆக்கங்கள் தந்த சகல மாணவர்களின் படைப்புகளையும் வெளியிட முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

நிதி எந்த அமைப்பின் வளர்ச்சிக்கும் இன்றி அமையாததொன்று. எந்த நிதி வழங்கும் அமைப்புகளில் இருந்தும் நிதியினைப் பெற்றுக் கொள்ளாத எமது கல்லூரி இங்கு கல்விகற்கும் மாணவர்கள் செலுத்தும் கட்டணத்தின் மூலமும், மற்றும் சமூக வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெரியோர்கள் செலுத்தும் அன்பளிப்பாலும், சிறப்பாக நடைபெற்று வருகின்றது. மேலும் பல தரப்பு மக்களும் ஒன்றிணைந்து நம்முன் உள்ள இப்பணியின் அவசியத்தையும் தேவையையும் உணர்ந்து ஒன்றிணைந்து செயல்படுவோம்.

நன்றி.
சுப்பிரமணியம் இராசரத்தினம்
கல்லூரிப் பொறுப்பாளர்



படிப்பகம்

www.padippakam.com





ஸ்காபுரோவில் உயர்தர வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. பொன்னையா விவேகானந்தன்.



ஸ்காபுரோவில் உயர்தர வகுப்பில் தமிழ்மொழியினைக் கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர் திரு. பே. ரொனடிக்ற்.



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மாணவரின் பார்வையில்!

நாம் இன்று இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் காலடி பதிக்கும் நாளை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம். தொழில் நுட்பமும் வாழ்க்கையும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த விஞ்ஞான உலகமே மனிதனை இயக்கிக் கொண்டு இருக்கின்றது. உலகத்தையே கணினிக்குள் அடக்கும் உள்ளகவலை (Internet) மிகவேகமாக வளர்ந்து கொண்டு வருகின்ற இவ் வேளையில், இந்த தொழில்நுட்ப வேகத்திற்கு ஏற்ப நாமும் தொழில் நுட்ப அறிவியல் சார் அறிவினை வளர்த்துக் கொள்ளல் மிகவும் அவசியமாகின்றது.

தற்பொழுது கணினியைப் பற்றிய அடிப்படை அறிவு சிறிதாவது தெரிந்திருந்தால்த்தான் தொழில் வாய்ப்பினை அளிக்கின்றார்கள். கனடாவில் கூடுதலான தொழில் வாய்ப்பை எடுத்துக் கொண்டால் கணினி பற்றிய அறிவினையே பரிசீலிக்கின்றார்கள். எங்கும் எதிலும் கணினியின் முக்கியத்துவமே மேலோங்கியிருக்கின்றது. எதிர் காலத்தில் இன்னும் பல கண்டு பிடிப்புகள் நிகழப் போவதும் உண்மையே. ஆகவே அதன் அடிப்படையில் தொழில் நுட்ப அறிவினை நாம் வளர்த்துக் கொள்வதும் உள்ளகவலையின் (Internet) ஆபத்தான ஒரு மறுபக்கத்தையும் பற்றி பெற்றோர்கள் அறிந்து கொண்டு சரியான வழிநடத்ல்களை பிள்ளைகளுக்கு வழங்குவதும் காலத்தின் கட்டாயமாகின்றது.

அந்த வகையில் கணினி பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்வதற்கு, தமிழ் சமுதாயத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதமே உலகத்தமிழர் இயக்கத்தின் உப அமைப்பான தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரி எனக் கூறின் மிகையாகாது. இக் கல்லூரி இலாபநோக்கமற்ற முறையில் எமது தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சியினை முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்குவதேயாகும். கணினித் துறையில் ஆரம்பம் முதல் தொழில் புரிவோர் வரை பயிலக் கூடிய சகல வகுப்புகளும் தகுதிவாய்ந்த ஆசிரியர்களினால் மிகவும் பொறுப்பாகவும் பொறுமையாகவும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் குறிப்பாகக் குறிப்பிடப்படக் கூடியது Office Assistant Certificate Program. இத்துறையானது கணினியின் அமைப்பு முறை அதன் செயல் முறை என்பனவற்றின் அடிப்படை அறிவினைப் பெற்றுக்கொள்வதோடு office வேலை வாய்ப்பிற்குத் தேவையான முக்கிய பின்வரும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

Data Entry
Dos of Windows 98
Coral WordPerfect 8
Lotus 97
MS Word 7.0
Excel 7.0
Access 7.0
Power Point 7.0
Internet

எமது தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சி கருதி இத்துறையில் கல்வி கற்கும் பெற்றோர்களுக்கு இலவசப்பிள்ளைப்பராமரிப்புச் சேவையும் வழங்கப்படுகின்றது. இச் சேவை எமது தமிழ்ச் சமுதாயப் பெற்றோர்களுக்குக் கிடைத்தற்கரிய பேறு என்றே கூறவேண்டும். குறைந்த கட்டணத்துடன் நிறைந்த கணினிப் பயிற்சியினைப் பெற்று இக்கல்லூரியும் தமிழ் சமுதாயமும் உயர்வடைய வாழ்த்துவதோடு எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோமாக.

திருமதி. வனிதா இராஜேந்திரம்



படிப்பகம்

www.padippakam.com





ஸ்காபுரோவில் இசை பயிலும் மாணவர்களுடன் ஆசிரியர்கள்
திருமதி. பிரேமாவதி ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி விஜயலட்சுமி சீனிவாசகம்.



லான்ஸ்டவுன் வளாகத்தில் உயர்தரப் பிரிவில் தமிழ்மொழி கற்கும் மாணவர்களுடன் ஆசிரியர்
திருமதி. பொ. திருஞானம், திருமதி. க. கௌளரி.




படிப்பகம்



# 1999
# மாணவமணி

21ம் நூற்றாண்டில் தமிழீழம்




மலர்-3

**மாணவர் ஆக்கங்கள்**

தமிழ்க்கலை-தொழில்நுட்பக் கல்லூரி Academy of Tamil Arts & Technology

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# மாணவமணி 99

மலர்-3

*புத்தக ஆக்கம்:*

அ.முருகதாஸ் (தாஸ்)

*உதவி:*

ப.துசிதா

*நன்றி*
*ஆசிரியர்கள்*
*மாணவர்கள்*

தொடர்புகளுக்கு: (416) 757-9601

படிப்பகம்

www.padippakam.com



# மாணவமணி மலர் மூன்றின் வாழ்த்து

மாணவர் பண்பாடு மாண்புக் கலாச்சாரம்
காணத் தொழில்நுட்பக் கல்லூரி – பேணவே
மூன்றாம் மணிநூலை மூன்றாம் முறையாகத்
தேன்போல் தருகிறார் தேர்ந்து

கோவாம் இரத்தினக் கொள்கைசேர் கட்டுரைகள்
மேவாது மேலும் மெருகூட்டி – நாவாலும்
நற்றமிழர் நல்லிசைக்க நல்விளக்கம் நாடியே
இற்றமிழில் ஈகிறார் ஈங்கு

நற்றலைமை நல்லவரில் நாடித் திகழ்ந்திடவும்
கற்றகலை கல்விக் கனடாவில் – உற்றதுவாய்
ஓங்கி வளர்ந்திடவே ஓதும் கலைகளிலே
ஈங்கு தருகிறாரே ஈர்ந்து

நல்லவராய் மாணவர்கள் நற்றமிழின் நல்சுவையில்
வல்லுநராய் என்றுமே வாழவேண்டும் – தொல்சிறப்பும்
விஞ்ஞான விந்தைகளும் வேண்டியே கற்கவேண்டும்
நெஞ்சால் நினைக்கிறேன் நேர்ந்து

**பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர்**
**தமிழ்த் துறைப் பொறுப்பாளர்**

படிப்பகம்



# வீரம் விளையும் வியத்தகு பூமி

காலம் எங்கள் காலன் ஆனதோ
ஞாலம் எங்கள் எதிரி ஆனதோ
கோலத் தமிழ் சோடை போனதோ
உலகத் தமிழினம் உறங்கி விட்டதோ!

ஆண்ட பரம்பரை அடிமை ஆனதோ
அன்னியன் கரங்கள் எம்மை ஆள்வதோ
ஆண்டு காலமாய் அகதியாய் அலைவதோ
அடுத்தவன் கையை அண்டி வாழ்வதோ!

புலியாய் தமிழன் பொங்கி எழுந்தான்
புயலாய் தேசம் அமைக்க விரைந்தான்
புவியில் இழந்த புகழை மீட்க
புனிதப் போரில் புகுந்து விட்டான்!

வெற்றி முரசு எங்கும் முழங்கும்
வேங்கை வீரர் வீரம் நிலைக்கும்
விண்ணில் வேங்கை கொடியும் பறக்கும்
மண்ணில் தமிழினம் மகிழ்ச்சியில் குளிக்கும்!

றெஜி மனுவேற்பிள்ளை
13ம் வகுப்பு


உலகத் தமிழினமே ஒன்றுபடு ஒன்றி
நலமாக நம்மீழம் நாடு
-ம.செ.அ.

www.padippakam.com





# புது வருடம்

*தர்ஷனா செல்வராஜா*
*13ம் வகுப்பு*

சித்திரை மாதம் பிறந்ததும் மகிழ்ந்தனர்
புத்தம் புதிய வருடம் பிறந்திடும்
தத்தம் துயரம் பனியாய் மறைந்திட
சித்தம் நிறைந்து வேண்டினர் தமிழரே!

புதியதை புகுத்தி பழையதை களையவே
பாதம் தன்னில் வேப்பம் இலையும்
தலையது தன்னில் மருத்து நீரையும்
வைத்து நீராடி வந்தனர் அந்நாளில்

உறவினர் தன்னுடன் கூடி உறவாடி
அறுசுவை உண்டியை சேர்ந்துமே உண்டு
சிறுவர் போலே அனைவரும் கூடியே
விறுவிறுப் புடனே விளையாடி மகிழ்ந்தனர்

அன்று இவைகள் நனவாக இருந்தது
இன்று இறந்த காலமாய் மாறியே
தொன்று தொட்டு வந்த பழக்கமும்
என்றோ கேட்டது போன்றுதான் உள்ளதே

பட்டாசு கொளுத்தி மகிழ்ந்து - உறவினர்
வீடுகள் தோறும் சென்றனர் அன்றே
தோட்டா அதற்கு பயந்து பயந்தே
இடங்கள் மாறியே செல்வதும் இன்றே

எதிர்பார்க் கின்றனர் இன்றும் பிறப்பை
புதிதாக மலரும் வருடத் தையல்ல
எதிரிகள் கொடுமைக்கு முற்றுப் புள்ளி
பதித்து, தமிழீழ விடுதலை தன்னையே!

தங்கக் கனடாத் தமிழீழக் கல்லூரி
பொங்கும் தமிழ்வளர்க்கும் பொற்பு.
-ம.செ.அ.



படிப்பகம்

www.padippakam.com





# நான் விரும்பும் பெரியார்

ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று உபதேசம் செய்யலாம். ஆனால் அன்னை திரேசா ஒருவரே இதற்கு இலக்கணமாக விளங்கியவரும், என்னால் விரும்பப்பட்டவருமாவார். ஓராண்டு ஈராண்டல்ல, எண்ணி எழுபது வருடங்கள் ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர் அன்னை திரேசா.

யுகோஸ்லாவியாவிலுள்ள அல்பானியா என்னும் கிராமத்தில் ஆயிரத்து தொள்ளாயிரத்து பத்தாம் ஆண்டு ஆவணி இருபத்தாறாம் திகதி 'நிக்கலஸ் – பெஜாக்சி' என்னும் பெற்றோருக்குப் பிறந்தார். இவருக்கு இவரது பெற்றோர் அழகாக 'அக்னஸ்' எனப் பெயரிட்டனர். இவர் சிறுவயதிலேயே தந்தையைப் பறிகொடுத்தார்.

நன்கு படித்த இவர் தனது 18வது வயதில், அதாவது இருபத்தெட்டாம் ஆண்டு அயர்லாந்து நாட்டின் டப்ளிங் நகரிலுள்ள திருச்சபையில் துறவியாகச் சேர்ந்தார். இவர் இளமையிலேயே ஆன்மீகத்தில் ஆழ்ந்த பற்றுதலும். இரக்க சிந்தனையும் படைத்தவராக இருந்தார்.

**சிவகங்கா சிவலிங்கம்**
**13ம் வகுப்பு**

ஒரு வருடத்தின் பின் இந்தியாவிலுள்ள டார்ஜிலிங் நகருக்கு சமயத்தொண்டு புரிய அனுப்பி வைக்கப்பட்டார். மூன்று வருட பிரம்மச்சரிய வாழ்க்கையின் பின் தனது பெயரை திரேசா என மாற்றிக்கொண்டார்.

மேலும் மூன்று வருடத்துக்குப் பிறகு கல்கத்தா நகரில் உள்ள கொன்வென்ட் பாடசாலையின் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்றார். இந்த நகரம் தான் இவரது பாதையை மாற்றி அமைத்தது.

இவர் கல்கத்தாவுக்குப் பயணம் செய்தபோதுதான் வறுமைமைப் பிடியிற் சிக்கித்தவிக்கும் ஏழை மக்களைக் கண்டார். சுதந்திரம் பெற்ற பாரதத்தில் இன்னும் இல்லாமை, கல்லாமை, வறுமை ஒழிக்கப்படவில்லையே என வருந்தினார். இஃது இந்தியாவில் மட்டுமல்ல, பல வளர்முக நாடுகளில் காணும் காட்சிகள் என்பதை உணர்ந்தார். இவர்களது ஏழ்மையும் ஆண்டிக்கோலமும் தான் அன்னையின் மனத்தை உறுத்தியது. எனவே நொந்த உள்ளங்களுக்கு அன்பு காட்டி அருளுரை சொல்லி ஒத்தடம் கொடுக்கப் புறப்பட்டார்.



'அன்பின் தூதுவர்' என்ற பெயரில் தமது இறைபணியகத்தை முதன்முதலாக கல்கத்தாவில் நிறுவினார் அன்னை. இன்று உலகமெங்கும் நாலாதிசைகளிலும் அன்னையின் இறைபணியகம் கிளைவிட்டு நிழல் பரப்பி வருகிறது.

ஆரம்பத்தில் தனது இறைபணியை முன்னெடுத்துச் செல்ல அன்னை பல இன்னல்களுக்கு ஆளாக வேண்டி ஏற்பட்டது. அத்தனை இன்னல்களையும் கடந்து ஆதரவற்றோரை



நல்லன நாம்காண்போம் நற்றமிழர் நல்வாழ்வில்
இல்லன இல்லாது போய். -ம.செ.அ.

படிப்பகம்

www.padippakam.com



அணைத்துக் காப்பதிலும் நோயுற்றோருக்குப் பணிவிடை செய்வதிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். தொழு நோயாளர்களைக் கூட மனிதர்களாகப் பார்த்து தனது மணிக்கைகளால் அரவணைத்தார். மதபேதங்களைக் கடந்து எல்லா மதத்தினரையும் நேசித்தார். 'கடமையைச் செய், பலனை எதிர்பாராதே' என்பதற்கு இலக்கண இலக்கியமானார் அன்னை திரேசா.

இறைபணியில் தன்னையே அர்ப்பணித்த அன்னையை அகில உலகமும் மறந்துவிடவில்லை. அவரது கொள்கையை ஆதரித்து பல விருதுகளையும் பாராட்டுக்களையும் வழங்கிக் கௌரவித்தது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டு அமெரிக்கா அன்னையைக் கௌரவப் பிரஜையாக ஏற்றுக்கொண்டது. அதே ஆண்டு தேசிய விருதும் வழங்கிப் பெருமை கொண்டது.

இத்தனை புகழ் பெற்றிருந்தும் கூட அன்னை இன்பமடைந்தாரேயொழிய இறுமாப்படையவில்லை. கர்வம் கொள்ளவில்லை. மாறாக கருணையே வடிவமானார்.

இவ்வுலகுக்கு அளவு கடந்த தொண்டாற்றிய அன்னை திரேசா இப்பூவுலகத்தை விட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றேழாம் ஆண்டு புரட்டாதி மாதம் ஐந்தாம் திகதி மறைந்தார்.

**'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று'**

என்ற வள்ளுவரின் குறளிற்கேற்ப வாழ்ந்து காட்டினார்.

இவர் செய்த ஒவ்வொரு கருமமும் என்னைக் கவர்ந்தவையே. கன்னியாக இருந்து எவ்வளவோ விரும்பத்தக்கவை இருந்தும், இவர் காதலித்தது மானிடம் ஒன்றையே ஆகும். அத்தோடு அவருக்கு இருந்த பனையளவு தொண்டுள்ளத்தில் ஒரு தினையளவு தொண்டுள்ளத்தையாவது வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை என் மனதில் புகட்டியவரும் இவரே. என்னால் விரும்பப் பட்டவரும் இவரே.



**'தொண்டின் திருவுருவம்**
**எளிமையின் மறுவடிவம்**
**கருணையின் இருப்பிடம்**
**அன்பின் இலக்கணம்**
**ஆதரவற்றோர்களின் சரணாலயம்'**

நான் விரும்பும் பெரியாரான அன்னை திரேசா இப்பூவுலகை விட்டு மறைந்து விட்டாலும் கூட, அவரது நினைவு உலகமாந்தர் ஒவ்வொருவரின் மனதிலும் பசு மரத்தாணி போல் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமேயில்லை.

'வாழ்க அன்னை திரேசா, வளர்க அவர்தம் சீரிய தொண்டு, மேம்படுக கருணை. 'மக்கள் தொண்டே மகேஸ்வரன் தொண்டு' இதுவே அன்னை திரேசாவின் இறையியல் வாழ்வு'

**நந்தமிழ் கல்லூரி நல்ல விழுமியங்கள்**
**இந்தக் கனடாவில் ஈந்து.**

*-ம.செ.அ.*



படிப்பகம்

www.padippakam.com



# சிந்தனைச் சுடர்கள்

வசந்தம் வருவது வழிவிட!
நில் நினை நினைப்பவை நிறைவேறும்!
நியாயம் உள்ள இடத்தில் கண் கொள்!
சிந்தனை உள்ள மனம் சித்திரம் ஆகும்!
சுற்றாடல் சுத்தமாக இருந்தாலே சுகந்தம் வீசும்!
இயற்கையை ரசித்தால் இன்பமாய் வாழலாம்!
மனம் உரமென்றால் செயல் பயிராகும்!
நம்பிக்கை வை நினைப்பவை நடைபெறும்!
நம் உயிர் கடவுள் அதுவே ஜோதி
சிரிப்பது அழகு அளவற்று சிரிக்காதே!

*சுமதி கோபால்*
*13ம் வகுப்பு*

# அன்பு

நலமே சூழ்ந்திட யாவரும் வாழ்வோம்
குலமே ஒன்றென குவலயம் காண்போம்
அன்பே வாழ்வென அனைவரும் உணர்வோம்
பண்பே உருவென இன்புற வாழ்வோம்

உயிராய் உலகினில் உதித்தார் எல்லாம்
உண்மை உருவினைக் கொண்டோர் எல்லாம்
அன்பில் இணைந்தே இன்புற வாழ்வார்
அழியா உலகினில் அன்புடன் வாழ்வோர்

*பே.கொலின்ஸ்*
*13ம் வகுப்பு*




உடல்உறுப்பு எல்லாம் மனிதருக்கு ஒன்று
நடைமுறையில் நாமுனர்தல் ஒன்று. *-ம.செ.அ.*

படிப்பகம்

www.padippakam.com





## கனடாவில்

# தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் பங்கு

சுபாஜினி முத்துக்குமார்
13ம் வகுப்பு

21ம் நூற்றாண்டில் அகலக் கால் பதிக்க மனித இனம் தன்னையும் தன்னைச் சூழ உள்ள வளங்களையும் தயார்படுத்தி வருகின்றது. எதிர்வரும் நூற்றாண்டின் வாழ்க்கை முறையின் அத்திவாரமாக இன்றைய கல்வியறிவும், தொழில் நுட்பங்களுமே இன்றியமையாத பங்கு வகிக்கும் என்பது உலகறிந்த உண்மை. எனவே மனித இனம் பல்வேறு துறைகளில் தம் அறிவைப் பரப்பி தம்மை அடுத்த நூற்றாண்டிற்கு தயார்படுத்தி வருகின்றது. இந்த வகையில் புலம் பெயர்ந்து வாழும் கனடாவாழ் தமிழர்களின் மத்தியில் தன் சேவையைப் பல்வேறு துறைகளில் பரப்பி, மக்களின் முன்னேற்றத்திற்காகவும், நல்லறிவிற்காகவும் தன் சேவையைத் திறம்பட நடாத்தி வருகின்றது கனடா தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி.

நமது தாய்மொழியாம் தமிழை அன்னிய நாடாகிய கனடாவிலும் பயின்று கொள்ள ஆலமரமாய் நின்று ஆதரவளிக்கின்றது இக்கல்லூரி. அத்தோடு அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை, எமது தமிழினம் தலை நிமிர்ந்து வாழ வலுவமைத்துக் கொடுக்கின்றது. தமிழ் மாணவர்களுக்கு தமிழை மட்டும் கற்பிப்பதோடு அல்லாமல் கலை வகுப்புகளையும், இலவச ஆங்கில வகுப்புகளையும் நடத்தி வருகின்றது. கணினித்துறை சார்ந்த அனைத்து வகுப்புகளையும், சிறியவர் முதல் தொழில் புரிவோருக்கான பயிற்சி வகுப்புகளையும் திறம்பட செயற்படுத்துகின்றனர். பாடசாலை மாணவர்களின் வீட்டுப் பாடங்களுக்கான பயிற்சிகளையும் அவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் பயிற்சி அளிக்கும் பெருமை இக்கல்லூரிக்கே சேரும். இக்கல்லூரியின் சேவை இத்தோடு நின்றுவிடவில்லை, கன்னியர்களின் கைவண்ணத்தைக் காட்டும் தையற்கலை இங்கு வெகுதிறம்பட பயிற்றுவிக்கப் படுகின்றது.

இக்கல்லூரியைப் பொறுத்தவரை இதன் செயற்பாடுகள் எமது தமிழ் மக்களுக்கு ஆற்றப்படுகின்ற மிகப் பெரிய சேவையென்றே சொல்லலாம், ஏனெனில் இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் இலவசமாகவே தமது சேவையைத் தம்மினிய தமிழினத்திற்கு வழங்கி வருகின்றனர். அரசாங்கத்திடம் இருந்தோ வேறு எங்கேனும் இருந்தோ பண உதவியை எதிர்பார்க்கவும் இல்லை, பெற்றுக் கொள்ளவும் இல்லை. உண்மையை உற்று நோக்குவோமானால் தமது தாய் மண்ணின் இனிய மொழியும் பண்பாடும் தமது கனேடிய மைந்தர்களுக்குச் சென்றடைய வேண்டும் என்ற சீரிய நோக்கோடு, தமது சிரமங்களையும் நேரத்தையும் பொருட்படுத்தாது ஊக்கங்களை வழங்கி வருகின்றனர் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியினர்.

தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய பல்கலைக்கழக நுழைவிற்குப் பெருந்துணை புரிகின்றது தமிழ்மொழி. கனடா நாட்டில் பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான பாடங்களோடு எமது தாய் மொழியாம் தமிழையும் ஒரு பாடமாக அரசாங்கம் அங்கீகரித்தமைக்கு நாம் பெருமைப்பட வேண்டும். இவ்வினிய கல்விச் சேவையை மாணவர்களாகிய நாம் சிரமமின்றி கற்றுத் தேறுவதற்கு உறுதுணையாய் நிற்கின்றது தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி. நம் தமிழின மக்கள் மட்டுமல்ல பல்வேறு இனத்தைச் சார்ந்த மாணவர்கள், பெரியோர்கள் இக்கல்வி நிறுவனத்திலே பயிலுகின்றனர் என்பதைக் காண்கின்ற போது இக்கல்லூரியின் பெருமை எவ்வளவு என்பதை நாம் கணித்துக் கூறுவது சிரமமே.

'குரு இல்லா வித்தை பாழ்' என்பார்கள் பெரியோர்கள். தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி குருவாய் இருந்து தமிழினத்தின் இளைய சமுதாயம் கலை

பண்பாட்டோடு வளர்வதற்காகப் பரதக்கலை, வீணை, மிருதங்கம், வயலின், வாய்ப்பாட்டு என்பனவற்றைக் கற்பிப்பதோடு அல்லாமல் அதற்குரிய ஒழுங்கு முறைப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் படுத்தியும், அவர்களைச் சரியான முறையில் பங்கு பற்ற வைத்து பரிசில்களையும் வழங்கி வருகின்றது தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி. மாணவர்களோடுமட்டும் நின்று விடாத கல்லூரி, தையற்கலையை பயிலும் பெண்களின் கைவண்ணங்களை மக்கள் பார்வைக்கு வைத்துப் பாராட்டைப் பெற்றுக் கொடுப்பதோடு அல்லாமல் வருடத்திற்கு மூன்று பெருவிழாக்களையும் திறம்பட நடத்தி அதில் கல்லூரியின் மாணவர்களின் முழுத்திறமையை மக்கள் முன் கொணரும் பெருமையும் இவர்களுக்குரியதே.

இக்கல்லூரியின் மேம்பாட்டிற்கு தமிழ் மக்களின் பங்கு இன்றியமையாதது ஒன்று. இன்னும் சிறப்புறக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் உதவிக்கரங்கள் ஒன்றுபட வேண்டும், அப்போதுதான் நம் இனம் அன்னிய நாட்டில் தலை நிமிர்ந்து வாழ முடியும். தமிழர்க்கென்று விளங்கும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு மக்களாகிய நாம் ஒன்றுபட்டால் எம்மினம் யாருக்கும் தலைசாய்க்கத் தேவையில்லை.

சுருங்கக் கூறின் நம்மினிய தாய்மொழியாம் தமிழையும், கலையையும் இக்கனடா நாட்டில் எமது இளைய தலைமுறை கற்றுத் தேறுவதற்காயும் பண்பாட்டு உணர்வோடு தம்மினம் தலை நிமிர்ந்து இந்நாட்டில் வாழ வேண்டும் என்பதற்காய், இலாப நோக்கற்ற தமது சேவையை நுண்கலைக் கூடம் என்னும் வடிவில் விருட்சமாய் நின்று தம்மினிய மக்களுக்குத் தனது சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியே எம்மின வளர்ச்சிக்கு உன் பணி அளப்பரியதே.



# என் உயிரே...

சுதாகரன் நவரட்னம்
13ம் வகுப்பு



உன்னை எப்படி வர்ணிப்பேன்...
உன் திருமேனியை வர்ணிப்பதா...?
உன் திருமுகத்தை வர்ணிப்பதா...? அல்லது...
என்னைத் திணற வைக்கும் உன் கண்களை வர்ணிப்பதா...?
என் உயிரே உன்னை எதனுடனும் ஒப்பிட முடியவில்லை...
ஏனெனில்... அழகு என்பதன் அகராதி நீ...
மென் நிலவே உன்னை நான் தினமும் பார்க்க வேண்டும்...
நான் மட்டுமே உன்னை இரசிக்க வேண்டும்...
உன்னை படைத்த பிரம்மனைக் கூட இரசிக்க விடமாட்டேன்...
உன் மென்மையை நான் மட்டும் இரசிக்க வேண்டும்...
என் பெண்பூவே நீ என்றும் என் கண்ணுள் இருக்கவேண்டும்...
மென் மலரே நீ மட்டும் எனக்குப் போதும்...
என்றும் நீ என்னருகில் இருக்க வேண்டும்...
என்றும் உனதன்பு எனக்கு மட்டுமே...
அன்பே நீ ஒரு போதும் என்கண்ணில் இருந்து மறையக்கூடாது...

என்றும் உனக்காக வாழ்வேன்...!




ஒற்றுமையாய் வாழ்தல் உயர்கொள்கை மாந்தருக்கு
நற்றுணையே நல்லுலகம் நாடு. -ம.செ.அ.

www.padippakam.com



# மாவீரர் நாள்





**மாவீரர்நாள்**

எம் மண்ணுக்கு வீரம் விளைந்து விட்டது என்பதை உரத்த குரலெடுத்து உலகுக்குச் சொல்லிய நாள். தமிழீழ தேசத்தின் எழுச்சிநாள். சர்வதேசத்தின் ஈர்ப்பை எம் ஈழத்தை நோக்கி இழுத்த நாள். அடக்கிவைத்து இனியும் ஈழத்தமிழர்களை ஆளமுடியாதென்று எதிரிகளுக்கு அறைகூவல் விடுத்தநாள். உரிமையை உயிர் கொடுத்தே பெறமுடியும் என்பதை உணர்த்திய நாள். இந்த மாவீரர்களின் இழப்பின் சோகத்திலும் கூடத் தலை கவிழக் கூடாது எனச் சபதமிடும்நாள். தமிழீழத்துக்காக தங்கள் விலைமதிப்பற்ற உயிர்களை விலையாகக் கொடுத்த மாபெரும் மாவீரரை சிரம்தாழ்த்தி வணங்கும் நாள். தமிழ் சந்ததி சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காக தங்கள் இளமைக் கனவுகளைப் புதைத்துவிட்டுத் தமிழீழம் காக்கத் தம்மை அழித்துக் கொண்டவர்களைத் துதிக்கும் நாள். மெழுகுவர்த்தி தன்னையழித்துப் பிறருக்கு ஒளிகொடுப்பதைப் போல் மாவீரர்களும் தம்மையழித்து தமிழீழத்துக்கு ஒளிவிளக்கேற்றியவர்கள்.

**சு. விநோதினி**
**13ம் வகுப்பு**

**யார் இந்த மாவீரர்கள்?**

எம் இனத்திற்காக, கௌரவத்திற்காக, சுதந்திரத்திற்காகத் தங்கள் உயிரையே, ஏன் தங்கள் வாழ்க்கையையே மண்ணுக்குத் தாரை வார்த்தவர்கள்தான் இந்த மாவீரர்கள். தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தியாகம் செய்தவர்கள்தான் இந்த மாவீரர்கள். பூவாக வாழ்ந்தவர்கள், புயலாக எழுந்து, புதிதாக வரலாறு படைத்தவர்கள்தான் இந்த மாவீரர்கள். வீரத்தாய் பெற்றெடுத்த வீர மறவர்கள் இவர்கள். தமிழீழப் போராட்டத்திலே அழியாதவர்கள் இவர்கள்.

இன்று ஆயிரம் ஆயிரம் மாவீரர்கள் தமிழீழம் மலரும் நாளில் தங்கள் கனவுகள் நனவாவதையும் தலைவன் ஏற்றப்போகும் தேசியக்கொடி காற்றில் அசையும் காட்சியையும் கல்லறைகளின் பக்கத்தில் கேட்கும் அழுகைக்குரல் என்றோ ஒரு நாள் மகிழ்ச்சியோடு தமிழீழ மலர்வைத் தங்களுக்குச் சொல்லுமென்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். எம் இனத்திற்காக, எம் இனத்தின் விடிவிற்காக புயலெனப் புறப்பட்ட இந்த மாவீரர்கள் கல்லறைகளில் மட்டும் வைத்து மக்களால் வணங்கப்படவில்லை, அவர்களின் நெஞ்சங்களில் வைத்துப் போற்றப் படுகின்றார்கள். ஆம், அவர்கள் இன்னும் எம் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றார்கள். மாவீரர்கள் புதைக்கப்படவில்லை, விதைக்கப்படுகிறார்கள். அவர்களின் அடுத்த மாவீரர்நாள் எம் விடுதலை பெற்ற தமிழீழ மண்ணில் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனும் சபதம் எடுப்போமாக.



படிப்பகம்

www.padippakam.com




# யாழ் பொது நூலக எரிப்பு - பண்பாட்டு படுகொலையின் ஒரு நினைவூட்டல்

ராஜ்தணிகைச்செல்வன்
சோமசுந்தரம்
13ம் வகுப்பு

1981ம் ஆண்டு ஆனி 1ம் திகதி. ஆம் எந்தவொரு மானமுள்ள, உணர்வுள்ள தமிழனாலும் மறக்க முடியாத நாளாகும். அன்றுதான் யாழ் பொது நூலகம் அரக்ககுணமுள்ள சிங்களக் காடையர் கூட்டத்தினால் தீக்கு இரையாக்கப்பட்டது. இவ்வாறு எரித்ததன் மூலம் சிங்களத் தேசமானது எந்தவொரு நாட்டிலும் எவராலும் செய்யப்படாத மாபெரும் பண்பாட்டுப் படுகொலையை நிகழ்த்தி முடித்ததுடன் தமிழராகிய எமது தேசிய விடுதலைப் போரை வீறுநடையோடு முன்னெடுக்கச் செய்தது.

தென்னாசியாவிலேயே பிரபல்யமான இந்த நூலகத்தை அமைப்பதற்கு கே. எம். செல்லப்பாவும் மேயர். சாம் ஏ. சபாபதியும் காரணகர்த்தாக்களாக விளங்கினர். மேயர் சபாபதி அவர்கள் யாழ் மாநகரப் பகுதியில் நூல் நிலையம் அமைப்பதற்கு சம்மதம் வழங்கினார். இந்திய கட்டடக்கலைஞர்களின் உதவியால் இந்த நூல் நிலையமானது 1959ம் ஆண்டில் திராவிடவடிவில் கட்டிமுடிக்கப்பட்டது. இந்த நூலகத்திற்குஇந்திய உயர் ஸ்தானிகராலயம், ஏஷியா பவுண்டேசன் ஆகியன உதவிகள் நல்கின. இந் நூலகத்தின் மூலம் மக்கள் அனைவரும் மிகப் பயனடைந்தனர்.



இந் நிலையிலே, முளைவிட்டுக் கொண்டிருந்த எம்முடைய தேசிய விடுதலைப்புரட்சி வீறுடன் வளரத் தொடங்கியது. மாவட்ட சபைகள் இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக அமையுமென பெரிதாகப் பரப்புரை செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் 1981 மே 31ம் திகதி யாழ் நாச்சிமார் கோவில் வீதியில் முன்னாள் யாழ் மாநகர முதல்வர் இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து "சட்டத்தின் காவலர்கள்" என்று கூறப்பட்டு வந்த அரச படையினர் நடத்திய வெறியாட்டத்தில் யாழ் நகரமே தீக்குப் பலியானது.

இரண்டாம் நாள் 1981 யூன் 1ம் திகதி நள்ளிரவு ............. முன்னைய நாள் நிகழ்வுகளை எண்ணி இரவு நிசப்தமாகவிருக்கிறது. யாழ் பொது நூலகத்தை நோக்கி கரிய உருவங்கள் சில முன்னேறுகின்றன. அவர்கள் சிங்களக் கூலிகள். கைகளில் பெற்றோல் 'கான்' களுடன் முன்பே திட்டமிட்ட ஒரு நடவடிக்கை போன்று அவர்கள் தமது இலக்கை நெருங்குகின்றனர். ஓரிரெண்டு நிமிடங்களினுள்ளே அந்தப் பயங்கரம் நிகழ்ந்து விடுகிறது. அந்தோ! 97000 நூல்களுடன் தேடற்கரிய கையெழுத்துப்பிரதிகளுடனும் பொது நூலகம் கூலிகளால் எரியூட்டப்பட்டு விட்டது.

ஈழத் தமிழர்களின் அறிவுக் கருவூலமாகவும் அரிய பொக்கிஷமாகவும் திகழ்ந்த அந்த அறிவாலயம் அழிக்கப்பட்டு விட்டது. யாழ் நூலகம் எரிவதை சம்பத்தரிசியார் கல்லூரி மேல்மாடியிலிருந்து அவதானித்த வணபிதா. டேவிட் அடிகளார் அந் நிகழ்வைத் தாங்க முடியாது அதிர்ச்சியில் மரணமானார். நூலகம் எரிக்கப்பட்ட போதே செய்திகளை இருட்டடிப்புச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின. இவ் வகையில், அந்நாட்களில் வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு தமிழ்த் தினசரியாகிய "ஈழநாடு" பத்திரிகை நிறுவனம் சாம்பல் மேடாக்கப்பட்டது. இந்நூல் நிலைய நிகழ்வு தொடர்பாக அரசு ஒரு தனிநபர் விசாரணைக் குழுவை முன்னாள் யாழ் அரச அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோ தலைமையில் நியமித்தது. இக் குழு ஏற்பட்ட இழப்பை மதிப்பீடு செய்து 1 கோடி ரூபாவை நட்ட ஈடாகத் தெரிவித்த போதும் அத்தொகை இன்றுவரை யாழ் பொதுநூலகத்திற்கு வழங்கப்படவில்லை.



பெற்றமனம் கண்கலங்க பேதமற சண்டைநீங்க
நற்கருணை ஒற்றுமையே நாடு. -ம.செ.அ.

படிப்பகம்

www.padippakam.com



# போராட ஆசை



போராட ஆசை
போராட ஆசை
பட்டுப் பாவாடை சட்டை வேண்டாம்
ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் வேண்டாம்
எனக்கு என்று ஓர் ஈழம் வேண்டும்
போராட ஆசை
போராட ஆசை
பஞ்சுமெத்தை வேண்டாம்
தொலைக்காட்சிப் பெட்டியும் வேண்டாம்
ஆடம்பர வாழ்க்கை வேண்டாம்
எனக்கு ஒரு நாடு வேண்டும்
போராட ஆசை
எனக்குப் போராட ஆசை



[illegible] தயாயோதி சண்முகம்
4ம் வகுப்பு

# மனம்

அன்று பாடினான் குரங்கென...!
அதை நான் நம்பவில்லை... ஆனால்
இன்று நிஜம் தான் அது...
ஏன் தவிக்கிறது...? ஏன் கலங்குகின்றது...?
நம்பிக்கை தான் மனமா...?
அது உடைந்தால் கலங்குமா...?
அது மறுபடியும் சேருமா...?
மனம் எனும் பூ மறுபடியும் மிளிருமா...?
அதன் வாசத்தை மறுபடியும் சுவாசிக்க முடியுமா...? ஆம்...
நம்பிக்கை தானே மனம்...!
அப்படியாயின் அது மறுபடியும் சிறகடிக்கும்...
எதிர்பார்க்கின்றேன்...!!
காலம் தான் பதில் கூறவேண்டும்...

சுதாகரன் நவரட்னம்
13ம் வகுப்பு

உலக மனிதர்யாம் ஒன்றேதான் என்றால்
நலமாம் சகோதரர்கள் நாம்
-ம.செ.அ.



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி



நிருஜா உலகநாதன்
13ம் வகுப்பு

தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி என்னும் இம் மாபெரும் கல்லூரி பற்றி அறியத்தருவதற்கு முன்பு, இக்கல்லூரி எந்த அமைப்பின் கீழ் உருவாகி இன்று இந்நிலையில் உயர்ந்து வளர்ந்து சிறப்புப்பெற்று விளங்குகின்றது என்பது பற்றிக் கூற வேண்டியது அவசியமாகும்.

எமது தாயக மண்ணிலே ஏற்பட்ட கொடூரமான வன்செயல்களினால் எமது இன மக்கள் தாயக மண்ணைப் பிரிந்து அந்நிய நாடுகளில் ஒவ்வொரு திசையிலும் வேதனையுடன் வாழ்ந்து வருகின்றார்கள். அதில் இந்த கனடா நாட்டில் வாழும் எம் மக்களுக்காக எல்லா வகையிலும் எமது தாயக நினைவுகள் மீட்டுவதற்காக "உலகத்தமிழர் இயக்கம்" என்றும் அமைப்பு முழுமையாக இயங்கி வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் முதியோர் இளைஞர் சிறுவர் எல்லோருமே எமது தாயகத்தைப் பிரிந்து வாடுகின்ற வேளையில், ஓரளவிற்கு மன ஆறுதலுடன் இங்கு சிறந்த முறையில் வாழவேண்டும் அவர்களுக்கு நிறைவு கிடைக்கவேண்டும் என்பதற்காகப் பல அமைப்புகளை உருவாக்கி ஒவ்வொரு அமைப்பையும் சிறந்த முறையில் வழிநடத்தி வருகின்றது உலகத்தமிழர் இயக்கம் என்ற இந்த உயரிய அமைப்பு.

இந்த அடிப்படையில் ஒவ்வொரு பிரிவினரது தேவைகளையும் இயன்றவரை நிறைவேற்றும் வகையில் மகளிர் அமைப்பு, செஞ்சோலை சிறுவர் அமைப்பு, கலைபண்பாட்டு கழகம், குடிவரவு குடியமர்வு சேவை என்பவற்றுடன் மக்கள், தகவல்களை அறிவதற்காக, பத்திரிகைச் சேவை, ஒலிபரப்புச் சேவை ஆகியன இயங்கி வருகின்றன. இவற்றுடன் எமது வளர்ந்தோர்களுக்கும், வளர்ந்துவரும் சிறுவர்களுக்கும் மூலதனமாகிய கல்வியைப் பல வழிகளிலும் கலைகளையும் சிறந்த முறையில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக எமது உலகத்தமிழர் இயக்கம், உருவாக்கியுள்ள கல்விச்சேவையே இந்தத் "தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி" என்ற மாபெரும் அமைப்பாகும்.

இவ்வமைப்பு 1993ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆறாவது ஆண்டு நிறைவு பெற்றுவிட்ட இப்புனிதமான கல்விச் சேவை மிகவேகமாக வளர்ந்து வருகின்றது. இக்கல்லூரி எம் இன மக்களின் மொழி, கலை, பண்பாடு ஆகியன, வளர்ச்சி அடைவதற்குரிய ஆக்கபூர்வமான வழிவகைகளை வகுத்துச் செயற்படுகின்றது.

எமது மொழி, கலை, பண்பாடு, மற்றும் பாரம்பரிய விழுமியங்களை இளம் சந்ததியினர் நன்குணர்ந்து அவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு, அறிவூட்டுதல், சமூக கலாச்சார நிகழ்ச்சிகளை ஊக்குவித்து எமது கலாச்சாரத் தனித்துவத்தை வளர்ந்துவரும் இளம் சமுதாய மொட்டுக்களுக்கு உணர்வூட்டும் நோக்குடன் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருகின்றது.

எமது இளம் சந்ததியினர் தமிழ்மொழி, கலை என்பவற்றுடன் இந்நாட்டில் தமது தொழிற்கல்வியிலும் சிறந்து விளங்கக் கூடியதாகவும் தொழிற்றுறையில் அறிவும் அனுபவமும் கொண்ட எம் மக்கள் கணினி யுகத்தில் ஒன்றிணைந்து தமது அறிவைப் பயன்படுத்தக் கூடிய வகையிலும் தற்போது எமது கல்விச்சேவை நிறுவனமாகிய தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி செயற்பட்டு வருகின்றது.



மனிதர் உயர்விலங்கு மற்றைவிலங்(கு) மட்டம்
நனிநினைக்கில் நாமெல்லாம் ஒன்று. -ம.செ.அ.

படிப்பகம்

www.padippakam.com



இக்கல்லூரி உலகத்தமிழர் இயக்கத்தின் இலாப நோக்கற்ற கல்விச்சேவை அமைப்பாக 1993 ஆடி மாதம் 18ம் திகதி பதிவு செய்யப்பட்டது. ரொறன்ரோ, ஸ்காபுரோ, மிசிசாகா ஆகிய இடங்களில் 1990ம் ஆண்டு ஆடி மாதம் வரை கணினி வகுப்புகளை மாத்திரம் நடத்தி வந்த கல்லூரி, 93 ஆடி மாதம் முதல் தமிழ்மொழி, கவின்கலை, மாணவர்களுக்கான கல்விச்சேவை, தொழிற்பயிற்சி, போன்ற துறைகளை ஆரம்பித்தது. இக்கல்லூரி தனக்கென தலைமைப் பணிமனையை 16 செப்ரெம்பர் 1996ல் ஆரம்பித்தது. இப்பணிமனை 14 ஒக்டோபர் 1996ல் திரு. பழநெடுமாறன் அவர்களால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இக்கல்லூரியின் தலைமைக் காரியாலயம் லோறன்ஸ் பேச்மவுண்ட் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ளது. மற்றும் கிளைகள் லான்ஸ்டவுண், புறோட்வியு, மிசிசாகா, உலகத்தமிழர் இயக்கம், மிட்லாண்ட்/எல்ஸ்மியர் நூல்நிலையம், நோத்யோக் ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளது. இதன் பொறுப்பாளராகத் திருவாளர் சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் நியமிக்கப்பட்டு தனது கடமையையே கண்ணாக மதித்து அயராது உழைத்து வருகின்றார். அவருடன் இணைந்து ஏனைய ஆசிரியர்களும், அதாவது ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கும் பல ஆசிரியர்களும் தமது கடமைகளைக் கருத்துடன் செயற்படுத்தி வருகின்றனர். எல்லோரது உழைப்பும் தான் இக்கல்லூரியின் இவ்வாறான வேகமான வளர்ச்சிக்கு மூலதனமாகும்.

இக்கல்லூரியின் ஆறாவது ஆண்டு நிறைவுபெற்று விட்ட இவ்வேளையில் அதனுடைய வளர்ச்சி குறித்து இங்கு வாழும் எமது தமிழ் மக்கள் யாவருமே பெருமிதம் அடையவேண்டும். எமது கல்லூரி கனடாவில் வாழ்கின்ற தமிழ் இளம் சிறார்களுக்குத் தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழர் பண்பாடு வரலாறு போன்றவற்றைப் போதிப்பதில் எடுத்துள்ள முயற்சி பெரும் ஆதரவைப் பெற்று வருவதில் மிகப் பெருமிதம் கொள்ள வேண்டும்.

எமது தமிழ் மக்கள் விதிவசத்தால் எமது தாயக மண்ணைப் பிரிந்தாலும், மறுபடியும் எமது தாயகத்தை நோக்கிச் செல்வோம். நாம் இழந்துவிட்ட நிம்மதி, அமைதி என்பன எமக்கு மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இங்கு வாழ்கின்றார்கள். அவ்வாறான ஒரு எதிர்பார்ப்புடன் இங்கு வாழ்கின்ற எம்மக்கள் எமது மொழி, கலை, பண்பாடு என்பனவற்றை பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு வாழ்கின்றார்கள். அதற்கு உறுதுணையாகவும், வழிகாட்டியாகவும் இத்தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி விளங்குகின்றது.

தமிழ்மக்கள் எட்டுத்திசை நோக்கிச் சென்று பரந்து வாழ்ந்தாலும், எந்த மொழி பேசுகின்ற நாட்டில் வாழ்ந்தாலும், முத்தமிழ் மொழியை என்றும், எங்கும் நிலைநாட்ட வேண்டும் என்பதில் எமது பெற்றோர்கள் ஆழ்ந்த குறிக்கோள் கொண்டவர்களாக உள்ளார்கள். தமது வளர்ந்துவரும் பிள்ளைகளுக்குத் தமிழ்மொழியைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற பேராவலுடன் வளர்த்து வருகின்றார்கள். அதற்கு உறுதுணையாக எமது இத்தமிழ்க்கலைத் தொழில் நுட்பக்கல்லூரி விளங்கி, தமிழ்மொழியை அடிப்படையில் இருந்து எமது பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்து வருகின்றது. அத்துடன் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பயிலப்போகும் வளர்ந்த மாணவர்களுக்கும் எமது தாய்மொழியை ஒரு பாடமாகப் பயிலுவதற்கு ஏற்றவகையில் பயிற்றுவிக்கப் படுகின்றது. அதுமட்டுமல்ல எந்த வகையான கலாச்சாரமுடைய தேசத்தில் நாம் வாழ்ந்தாலும், எமது வளர்ந்து வருகின்ற இளம் சமுதாயத்தினர் எமது கலை, பண்பாட்டினைக் கடைப்பிடிக்க வேண்டும், தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக இக்கல்லூரி பெரிதும் பாடுபட்டு எமது பாரம்பரிய கலைகளாகிய பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், பியானோ, கீபோடிங் ஆகியவற்றைப் பயிற்றுவித்து, அவற்றில் எமது பிள்ளைகளைச் சிறந்த முறையில் தேர்ச்சியடைய வழிவகுத்துள்ளது. மாணவர்கள் சிறந்து விளங்குவது இக்கல்லூரியில் ஒவ்வொரு துறையிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களையே சாரும்.

வேற்றுமையில் ஒற்றுமையே வேண்டும் உலகிற்கு
ஏற்றுநாம் வாழ்வதாலே ஒன்று. -ம.செ.அ.



படிப்பகம்

www.padippakam.com




அது தவிர இன்று நாம் வேகமாக முன்னேறி வரும் கணினியுகத்தில் வாழ்கின்றோம். இக்கணினியிலுள்ள நுட்பத்தைச் சிறுவயதிலிருந்தே தேர்ச்சி பெறுவதில் எமது மாணவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுத்து பல கணினி வகுப்புக்களை நடாத்தி பிள்ளைகளைச் சிறந்த முறையில் தேர்ச்சி பெறவைத்துள்ளது இக்கல்லூரியின் மற்றுமோர் சிறப்பாகும். சிறுவர் மட்டுமல்ல வளர்ந்தோர்கள் இன்று இந்த நாட்டில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். அதற்கு ஒரு முக்கிய பிரச்சனையாக விளங்குவது ஆங்கில மொழியும், கணணியின் வளர்ச்சியும் ஆகும். வளர்ந்தோர்கள், இன்று கணணி வகுப்புக்களில் தேர்ச்சி பெற்று வெளியில் சென்று இங்கு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள ஒரு வழிகாட்டியாக இக் கல்லூரி விளங்குவது நாம் மறக்கமுடியாது. கணணித்துறையில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் தமது அயராத உழைப்பால் இதை வழிவகுத்துக் கொடுத்துள்ளார்கள்.

''என்ன பயிரை விதைத்தாலும் அதன் அறுவடை தான் மூலதனம்'', அதேபோல எமது பிள்ளைகளை இவ்வாறு பலவகையான துறைகளிலும் தேர்ச்சி பெற்று வருகின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதிற்காக இக்கல்லூரி மாணவர்களுடைய ஆக்கங்களைப் பெற்றோர்களுக்கு விளக்கும் நோக்குடனும் எமது தேசத்தில் பாரம்பரியமாக கொண்டாடப்பட்டு வருகின்ற கலாச்சார விழாக்களை எமது பிள்ளைகளுக்கு நினைவூட்டும் வகையிலும் காலத்திற்கு காலம் அந்த விழாக்களை ஏற்பாடு செய்து சிறப்பான முறையில் நடாத்தி வருகின்றது இக்கல்லூரி. இந்தக்கல்லூரிப் பொறுப்பாளரையும் அவருக்கு உறுதுணையாக விளங்கி அயராது உழைத்து வரும் மற்றும் சக ஆசிரியர்கள் தொண்டர்களையுமே இப்பெருமைகள் சாரும். உதாரணமாக இக்கல்லூரி ஆண்டுவிழா, சரஸ்வதி பூஜை, நத்தார் விழா, மாவீரர் விழா, ஒன்றுகூடல் எனப்பல விழாக்களை எமது கல்லூரி நடாத்துகின்றது.

இவ்வாறு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைந்து வருகின்ற இந்தக்கல்லூரி மேலும் சிறப்புற்று வளரவேண்டும் என இறைவனின் ஆசியை எதிர்பார்க்கும் இந்த வேளையில், இதன் பொறுப்பாளர், ஆசிரியர்களின் உழைப்பிற்கு ஊக்கம் கொடுத்து மாணவர்களும், பெற்றோர்களும் சேர்ந்து உழைத்தால் இங்கு இக்கல்லூரி மேலும் வளர்ச்சி எய்தி சிறப்படையும் என்பது திண்ணம்.

## நீதான்.....



என் கவிதைக்கு வரிவடிவம் தந்தவனும் நீதான்!
என் மனதினில் காதல் வலையினைத் தொடுத்தவனும் நீதான்!
என் உயிரினில் உடலாகக் கலந்தவனும் நீதான்!
என் உள்ளத்தால் நினைத்த கட்டழகனும் நீதான்!

உன் கடைக் கண்ணால் என் உள்ளத்தைத் தொட்டவனும் நீதான்!
உன் நினைப்பினால் என் மனதை வதைப்பவனும் நீதான்!
முதன்முதலில் வெட்கத்தை அறிமுகம் செய்தவனும் நீதான்!
முழுமையாய் மனதினைத் தொட்டவனும் நீதான்!

என் நிழலுக்கு ஒரு உருவத்தை தந்தவனும் நீதான்!
என் தூக்கத்தில் தோன்றும் மன்னவனும் நீதான்!
என் பெண்மையை முதன்முதலாக உணரவைத்தவனும் நீதான்!
என் இதயத்தை திருடிய கள்வனும் நீதான்!

**சலோமி - மொளினா**




கண்களிலே காணும் அருள்மருள் காக்குமாய்க்கும்
கண்டுநீர் வாழ்தலே கண்.
*-ம.செ.அ.*

படிப்பகம்

www.padippakam.com



# மாணவர்களின் பார்வையில் தீபம்



*தீமையோ, நன்மையோ*
*கண்டு ஒளிர்கின்ற நான்*
*எதையும் எப்போதும் மொழிவதில்லை*

-முரலீதரன்-

*தீபமே! நீ ஒளித்துக் கொண்டே இருந்தாலும்*
*உன்னுள் ஒழிந்திருக்கும் சம்பவங்கள் எத்தனை?*

-தனுசா பாலகுமார்

*தீபங்கள் நிலவுப் பெண்ணின் தோழிகள்*
*இரவுப் பெண்ணின் எதிரிகள்*

-பாமினி சிவா



*ஒரு புன்னகையைக் கொல்லுவதுபோல*
*கண்ணை நாமே குருடாக்குவதா*

-நர்மதா

*நான் கண்களை அணைத்தால் - நாம்*
*மண்ணினை அணைப்போம் என்றெண்ணி*
*தன் தேகம் அழித்து - நம்*
*தேசம் வாழவைக்கும்*
*அக்கினிக் குழந்தைகள்.*

-சுபாஜினி முத்துக்குமார்

*தீபத்தை அணைப்பது போல் - நாம்*
*ரகசியங்களைக் காப்பாற்ற வேண்டும்.*

-கிறிசாந்தன் பாலசிங்கம்

*நீ என் இதயத்துக்கு வெளிச்சம் தந்துவிட்டு,*
*ஏன் மறைந்துவிட்டாய்*

-சுகன்யா கோணேஸ்வரன்

*தீபமே ஆண்டவன் சன்னிதியில்*
*நீ எரிந்து கொண்டு இருக்கிறாய்*
*ஆனால் சிலர் உன்னைத் தம்*
*மனதுக்குள்ளும் எரித்துக்*
*கொண்டிருக்கிறார்கள்.*

-வாணி சிறி பாலசிங்கம்

*உலகத்திற்கே ஒளி காட்டும் நீ ஏன்?*
*சில இதயங்களுக்கு மட்டும் ஒளிகாட்ட மறுக்கிறாய்?*

-பாமினி சண்முகலிங்கம்

*வெளிச்சம் என் வேடம்*
*திரி என் உருவம்*

-குமுதா பத்மநாதன்

*தீபங்களை அணைக்க நேரும் போதெல்லாம்...*
*கலங்குவதுண்டு*

-லலிதா சிவபாதலிங்கம்

*தீபமே!*
*இராப்பெண் சூடிய வைரம் நீ*
*மனிதனின் தவறுகளை சுட்டிக்காட்டும் நீ!*
*பட்டது போதும்*
*ஏன் இன்னும் தாமதம்?*

-நிசாந்தி

*தீபமே!*
*நீ உன்னையே அழித்து எமக்கு ஒளியாய் நிகழ்ந்தாயே*
*உனக்கு எவ்வளவு பரந்த இதயம்*

-சர்னி

*உன்னை உருக்கி உலகுக்கு ஒளிதரும் தீபமே,*
*என்னை மட்டும் ஏன் அழிக்கின்றாய்?*
*நான் தண்ணீர்!*

-குமணா

*அகிலத்தின் வால் நட்சத்திரங்கள்*
*அவை இரவில் மனிதனின் வழிகாட்டி*

-சுஜந்தன்



*பூமிக்கு வெளிச்சம் சந்திரன்*
*வீட்டுக்கு வெளிச்சம் விளக்கு*
*என் இதயம் மட்டும் ஏன் இருட்டு*
*அதற்கு நீயே வெளிச்சம்!*
*கொடுப்பாயோ விரைவில்?*

-விஜிதா

*தீபமே! உன்னைப் புரியவில்லை*
*வழி காட்டுபவன் கையிலும் இருக்கிறாய்*
*வீட்டை கொழுத்துபவன் கையிலும் இருக்கிறாய்*
*இருட்டின் அச்சத்தை போக்கி வெளிச்சத்தைக்*
*கொடுக்கும் நீ*
*ஏன் இருட்டில் இருக்கும் சில இதயங்களின்*
*அச்சத்தை போக்காமல் இருட்டிலே ஆழ்த்திவிட்டாய்*

-ரம்யா

**கண்ணே உலகிலே விண்ணே அதுவறிவு**
**கண்டுகொள்நீ இன்றிருந்தே காத்து.** *-ம.செ.அ.*



படிப்பகம்

www.padippakam.com



*தீபமே! நீ எங்கே?*
*உன் வருகைக்காகக் காத்திருக்கும்*
*இச்சிறியேனுக்கு அருள் புரிவாயா?*
*நீயில்லாமல் நான் படும் அவலங்களை அறிவாயா?*
*ஊருக்கெல்லாம் ஒளி கொடுக்கும் நீ - என்*
*வாழ்க்கையை மட்டும் கைவிட்டு விட்டாயே!*
*உன்னை நான் எப்படிச் சொல்வேன்?*

கிருசாந்தி



*இரவில் வாய்விட்டுச் சிரிக்கிறேன்*
*ஏனென்றால்*
*விடியலில்*
*மனித விழுமியங்கள்*
*என்னை நிச்சயமாக*
*நசுக்க வரும்.*

-க. பாலமுருகன்

*சூரியன் உதிக்கும் போது தீபம் மறைந்தாலத்தான்,*
*அதர்க்கு மதிப்பு!*
*சூரியன் மறையும் போது தீபம் ஒளிர்ந்தால்த் தான்,*
*அதற்க்குச் சிறப்பு!*

-பிரியா

*சூரியனிடம் தவணை முறையில்*
*சன்மானம் வாங்கும் நிலவுத் தீபமே!*
*ஒளியே நீ கோபப்படும் போது*
*மின்னலாய் என் கண்ணைப் பறிக்கிறாய்!*
*ஜாலியாகும் போது என்*
*படுக்கை அறை ஆரவாரத்துக்கு ஆதாரமாகிறாய்.*

-முருகதாஸ்

*உன் மௌனத்தால் ஏன் என் இதய தீபத்தை*
*எரிய விட்டு வேடிக்கை பார்க்கிறாய்*

-மணிவண்ணம்

*நீ வெளிச்சம்*
*நான் இருட்டு*
*நீ இருந்து விட்டால்*
*நான் அணைந்து போவேன்.*

-கோமதி

*அன்று அவன் கண்ணின் ஒளி தீபம்*
*இன்று எனது மனதின் காதல் தீபம்.*

-அபிராமி

*தீபமே! ஏன் நீ பகலில் அணைகிறாய்?*
*மக்களின் பகல் வேசத்தைப் பார்க்க முடியாமலா?*

-மங்களா

*உலகத்திற்கே ஒளி காட்டும் தீயே*
*சில இதயங்களுக்கு மட்டும் ஒளிகாட்ட மறுக்கிறாய்?*

-திலீபா

*மனதில் தீ மூட்டி இரவெல்லாம் காதலியை தேடினேன்*
*எதிரில் தீ மூட்டி நாளெல்லாம் காதலியை காட்டினாய்*
*மனதில் தீயணைத்து நான் காதலியைச் சேருவேன்*
*விரைவில் தீயணைத்து நீ எம்மை வாழ்த்துவாய்*

-மயூரன்

## சிந்தனைக்கு

- சிந்திக்காமல் பேசுவது
  குறிபார்க்காது சுடுவதற்கு ஒப்பானது.
- எதையும் 'நாளை' என்று
  எண்ணாதே...
  அது, நீ 'உலகத்தை'
  புரியாமையே...!
- மற்றவர் செய்வதில் எது உனக்குப்
  பிடிக்கவில்லையோ...
  அதை நீ மற்றவர்க்குச்
  செய்யாதே...!
- 'நம்பிக்கை' என்பது முகம் பார்க்கும்
  கண்ணாடி போன்றது,
  ஒரு முறை உடைந்தால் அதை
  வீசிவிட வேண்டும்.
- எல்லோரையும் 'நம்புவது' ஆபத்து...
  ஆனால்
  யாரையும் நம்பாமல் இருப்பது
  'பேராபத்தானது.'
- 'அன்பு' என்பது எப்போதும் யார்
  மீதும் தோன்றும்...
  ஆனால், 'பாசம்' என்பது
  காரணத்தோடு தான் தோன்றும்.
- 'முடியாது' என்ற வார்த்தையை
  'சோம்பேறிகள்' மட்டுமே
  பாவிக்கலாம்.

**-சுதாகரன் நவரட்ணம்**



கண்கதவால் உட்புகுமே காணுகின்ற நன்மைதீமை
விண்டுநீர் வாழ்தல் விரும்பு.

*-ம.செ.அ.*

படிப்பகம்

www.padippakam.com



# வேங்கைகள்



காற்றாய் இங்கே கலந்து போகிறீர்
எங்கள் கண்ணீர் கரைய வைக்கிறீர்
பற்றாய் மண்ணை நினைத்து நிற்கிறீர்
எங்கள் நெஞ்சினில் நிலைத்து விடுகிறீர்

கடலிலே புதிதாய்க் காவியம் படைக்கிறீர்
அலைகளாய் மாறிக் கரையைத் தொடுகிறீர்
உடலிலே குண்டுகள் கட்டிச் செல்கிறீர்
இந்த உலகையே வியக்க வைக்கிறீர்

பிறக்கப் போகும் தமிழீ ழத்தின்
அடிக்கல் ஆக மாறியே விடுகிறீர்
இறப்பை நீங்களே நிச்சயம் செய்கிறீர்
இயற்கை யோடும் எதிர்த்து நிற்கிறீர்

மில்லர் காட்டிய பாதையில் செல்கிறீர்
எதிரியின் முகாமில் இடியாய் வெடிக்கிறீர்
கல்லறை களிலே அமைதியாய் உறங்கிறீர்
எங்கள் மண்ணின் வேங்கைகள் ஆகிறீர்

தம்பியின் தலைமையில் ஒன்று சேர்கிறீர்
பகைவனின் முகாமையே தாக்கி வெல்கிறீர்
தும்பிகள் வானில் பறக்க விடுகிறீர்
மகிழ்ச்சியில் எம்மைக் குதிக்க வைக்கிறீர்

அன்னை மடியில் அன்று உறங்கினீர்
தமிழன் னையவள் மண்ணிலு ரமாகிறீர்
வன்னி மண்ணில் சாதனை படைக்கிறீர்
தமிழனின் மானம் காத்து நிற்கிறீர்

வெடிகள் கொண்டு எதிரியைத் தாக்கிறீர்
வீறு கொண்டே பொங்கி எழுகிறீர்
விடிவு வரும்வரை தூங்க மறுக்கிறீர்
வேங்கைகள் நாங்கள் என்று நிற்கிறீர்

சொந்தம் பந்தம் விட்டு வருகிறீர்
சோகம் எல்லாம் தாங்கி நிற்கிறீர்
வெந்து வேகும் குண்டடி படுகிறீர்
கொண்ட கொள்கை மாறா திருக்கிறீர்

துடிக்கும் துவக்காய் துள்ளி எழுகிறீர்
கொடியவர் மீது குண்டுகள் பொழிகிறீர்
விடிவெள் ளியாக விளங்கி நிற்கிறீர்
வீரம் கொண்டே தமிழ்மண் காக்கிறீர்

வெல்லும் எங்கள் தமிழ்ப்படை ஒருநாள்
மலரும் எமக்கொரு நாடு அன்றே
சொல்லும் ஒருநாள் இந்த உலகம்
தமிழரின் தாகம் தமிழீ ழமென்றே!

தாஸ்
(பழைய மாணவன்)



படிப்பகம்

# இதுவே உங்கள் உலகம்



இதுவே உங்கள் உலகம்
உலகம் உங்கள் கையில் வேண்டும்!

வேண்டும் புதிதாய் கற்பனை
கற்பனை நிறைந்து கருதும் லட்சியம்!

லட்சியம் சிறந்த சித்திரம்
சித்திரம் வரைய பேனா மைகள் எங்கே!

எங்கே இளைஞர்கள் கூட்டம்
கூட்டம் கூடுவோம் நாங்கள் ஒன்றாய்!

ஒன்றாய் என்றும் நெஞ்சில்
